DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 10.09.2024.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.3 |
| Name | : | வெள்ளையன் |
| Father Name | : | கவுண்டன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 10.09.2024. in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கீரைக்காட்டில் குடியிருந்து கிளேசி புருக் எஸ்டேட்டில் வாட்ச்மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரியும் எங்கள் எஸ்டேட்டில் வாட்ச்மேனாக வேலை செய்ததால் அவரை எனக்கு தெரியும். கடந்த 10.03.2024-ம் தேதி அன்று முழுவதும் அவர் தான் காவல் பணியில் இருந்தார். அன்று விடுமுறை தினம் என்பதால் எதிரி மட்டுமே பணியில் இருந்தார். மாலை சுமார் 05.00 மணிக்கு எஸ்டேட்டில் வேலை செய்யும் சங்கி மற்றும் சுர்ஜீத் ஆகிய வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் வந்து எஸ்டேட்டில் ஒரு மூட்டை மிளகு பறித்து மூட்டையில் யாரோ கட்டி வைத்து இருப்பதாக மேலாளரிடம் சொன்னார்கள். அடிக்கடி எஸ்டேட்டில் திருடு போவதால் மூட்டையை எடுப்பதற்காக திருடர்கள் வருவார்கள் என்பதால் என்னையும், சங்கி ஆகியவர்களை காவலுக்கு மேலாளர் வரச்சொன்னார். எதிரி மிளகு மூட்டையை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்றார். அருகில் சென்று டார்ச் அடித்து மேலாளர் பார்த்தபோது கோவிந்தன் என தெரியவந்ததால் நீயாடா என கேட்டவுடன் அவர் மூட்டை போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். வேலி மீது ஏறி கீழே குதித்தபோது முட்டியில் அடிப்பட்டதால் அவரால் ஓட முடியாமல் எங்களிடம் மாட்டிக்கொண்டார். தான் செய்தது தவறு என்றும், தன்னை மன்னித்து விடுமாறும் வெளியில் சொல்லவேண்டாம் என்று கெஞ்சினார். நடந்த விவரத்தை விசிடர் சுப்பிரமணியனுக்கு போன் மூலம் தகவல் மேலாளர் சொன்னார். அவரிடமும் தான் செய்தது தவறு மன்னித்து விடுங்கள்

என எதிரி கெஞ்சினார். பிறகு சுப்பிரமணி காலையில் எதிரியை வந்து தன்னை பார்க்குமாறும் தற்போது அவரை விட்டுவிடுமாறும் சொன்னார். எதிரியை அவரது வீட்டில் விட்டு விட்டார்கள். மறுநாள் காலை விசிடர் சுப்பிரமணி, கணேசன் மற்றும் மாது ஆகியோர் எஸ்டேட்டில் இருந்தபோது எதிரி வந்தார். சுப்பிரமணியும் கணேசனும் எதிரியிடம் விசாரணை செய்தார்கள். இதற்கு முன்பு தான் திருடிய 1 மூட்டை மிளகும், 3 மூட்டை காப்பியும் தன் வீட்டில் வைத்திருப்பதாகவும் அதை எடுத்து தருவதாக அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றார். எதிரி வீட்டிலிருந்து 3 மூட்டை காப்பியும், 1 மூட்டை மிளகும் கொடுத்தார்கள். மறுநாள் 12-ம் தேதி காலையில் கோவிந்தசாமியின் அப்பாவும், மனைவியும் எஸ்டேட்டிற்கு வந்து எதிரி திருடிய காப்பியையும், மிளகையும் கொடுத்துவிட்டோம் எதற்காக ஊரில் அவர் திருடியதாக சொன்னீர்கள். எல்லோரும் கேட்கிறார்கள் எங்களுக்கு அசிங்கமாக உள்ளது என தகராறு செய்தார்கள். மேலாளர் உடனே விசிடர் சுப்பிரமணியத்திற்கு போன் செய்து சொன்னேன். அவர் சொன்னபடி மேலாளர் 13-ம் தேதி கோவிந்தசாமி மீது நடவடிக்கை எடுக்கும்மாறு ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் நான் நடந்த விவரம் சொன்னேன்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் எஸ்டேட்டில் வசிக்கவில்லை என்றால் சரிதான். 10.03.2024-ம் தேதியன்று பகல் பொழுதில் நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு இரவு வேலை என்பதால் நான் மாலை 04.30 மணிக்கு சென்றேன். காலையில் யார் பணியில் இருந்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் எஸ்டேட் அருகாமையிலேயே எனது தோட்டத்தில் இருந்ததால் எதிரி தான் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். எஸ்டேட்டில் வருகை பதிவேடு உள்ளது என்றால் ஆமாம். எதிரிக்கு தோட்டம் உள்ளதா என்றால் ஆமாம். ஒரு நபர் ஒரு நாளைக்கு எவ்வளவு மிளகு பறிக்கமுடியும் என்றால் சுமார் 50 கிலோ எடுக்க முடியும். மிளகை யார் பறித்து மூட்டையில் வைத்தார்கள் என நேரடியாக எனக்கு தெரியாது என்றால் ஆமாம். மிளகை எடை போட்டு பார்த்தோமா என்றால் ஆமாம். எஸ்டேட்டில் காப்பி, மிளகிற்கு தனியாக குடோன் உள்ளது என்றால் சரிதான். அன்றாடும் பறிக்கும் மிளகு, காப்பிகளை குடோனில் வைப்பார்கள் என்றால் சரிதான். அதற்கு வரவு செலவு கணக்கு உள்ளது என்றால் சரிதான். அதை அ.சா.1 தான் பராமரிக்கிறார் என்றால் சரிதான். எதிரி வீட்டிலிருந்து மிளகு, காப்பி மூட்டைகளை அ.சா.1 எடுத்துச்சென்றபோது நான் உடன் செல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 12.03.2024-ம் தேதி விசாரணை செய்தார்கள். 11-ம் தேதி எதிரியை எஸ்டேட் அலுவலகத்தில் வைத்து சுரேஷ் மற்றும் மூவர் சேர்ந்து அடித்து எதிரி வீட்டிலிருந்து மிளகு, காப்பியை அக்கிரமமாக எடுத்து சென்றார்கள் என்றால் இல்லை. எஸ்டேட்டிற்கு பொதுவாக ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்றால் தொழிலாளிகளுக்கு தான் விடுமுறை நாங்கள் வாட்ச்மேன் வேலை பார்ப்பததால் எங்களுக்கு இல்லை. எதிரி எப்போதும் எங்கள்

எஸ்டேட்டில் வாட்ச்மேன் வேலை செய்தது இல்லை என்றால் சரியல்ல. அவர் வேலை செய்தார். நான் நிர்வாகத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10–ம் தேதி இரவு சம்பவம் நடந்ததாக நான் சொல்வதும் தவறு என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Jayanthi,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.